செய்தி வெளியீடு எண்: 350 நாள் : 16.07.2016

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்கள் அவர்கள் பயின்ற பள்ளிகளிலேயே வேலைவாய்ப்பு பதிவினை மேற்கொள்ளுமாறு ஆணையிட்டார்கள். அதன்படி 2011ஆம் ஆண்டு முதல் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்கள் தங்கள் கல்வித் தகுதிகளை தாங்கள் பயின்ற பள்ளிகளின் மூலமாக நேரடியாக இத்துறையின் இணையதளத்தில் https://tnvelaivaaippu.gov.in பதிவு செய்து அடையாள அட்டை (X-10) பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும் 2011, 2012, 2013, 2014 மற்றும் 2015ஆகிய கடந்த ஐந்து ஆண்டுகளில் பத்தாம் வகுப்பு கல்வித் தகுதியைத் தாங்கள் பயின்ற பள்ளிகளின் மூலமாக இணையதளத்தில் 35,53,353 மாணவர்களுக்கு பதிவுகள் செய்யப்பட்டு வேலைவாய்ப்பு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன. இதனால் மாணவர்களின் போக்குவரத்து செலவு, காலவிரையம், தேவையற்ற அலைச்சல்கள் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் ஏற்படும் கூட்ட நெரிசல்கள் தவிர்க்கப்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு தற்போது 2016ஆம் ஆண்டிற்கான பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களின் மதிப்பெண் பட்டியல் 18.07.2016 அன்று வழங்கப்படவுள்ளது. அவ்வாறு வழங்கப்படும் நாளான 18.07.2016 முதல் 01.08.2016 வரை 15 நாட்களுக்கு 18.07.2016 நாளினையே பதிவுமூப்பு தேதியாக அவர்கள் பயின்ற பள்ளியிலேயே பதிவு செய்து வழங்குவதற்கு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை மற்றும் பள்ளிக் கல்வித்துறை இணைந்து சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மதிப்பெண் சான்று வழங்கப்படும் பள்ளிகளிலேயே இணையதளம் வாயிலாக வேலைவாய்ப்பு அலுவலக பதிவுப்பணி நடைபெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த அரிய வாய்ப்பினை மாணவர்கள் பயன்படுத்தும் பொருட்டு தமிழ்நாட்டில் உள்ள 3,893 அரசு மேல்நிலைப்பள்ளிகளில் வேலைவாய்ப்பு பதிவுகள் தற்போது மேற்கொள்ளப்படவுள்ளது.

எனவே, மாணவர்கள் ஆதார் அட்டை எண், குடும்ப அட்டை, கைப்பேசி எண், மின்னஞ்சல் முகவரி ஆகிய விவரங்களுடன் மதிப்பெண் சான்று வழங்கப்படும் நாளன்று எடுத்து வர வேண்டும். பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற வேலைவாய்ப்பு பதிவு செய்ய விரும்பும் அனைத்து மாணவர்களும் தவறாது இந்த வசதியை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், மெட்ரிக் பள்ளி மற்றும் சி.பி.எஸ்.இ பயின்ற மாணவர்களுக்கும் தங்கள் கல்வித் தகுதியை வேலைவாய்ப்பு துறையின் இணையதளத்தில் https://tnvelaivaaippu.gov.in தங்கள் அளவிலேயே "Online–ல்" பதிவு செய்யலாம் அல்லது அவர்கள் தங்கள் மாவட்டத்திற்குரிய வேலைவாய்ப்பு அலுவலகத்தையும் அணுகி பதிவுச் செய்யலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இயக்குநர்,
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை,
(வேலைவாய்ப்பு பிரிவு)
சென்னை – 32.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**